**<u>சாதாரண கூட்டம்</u>**

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ம் நாள் திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

<table>
<tr><th>மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>06.01.2020</td><td>

**பொருள் எண் 1**

14வது மத்திய நிதி ஆணையம் 2019-2020ன் கீழ் தார்சாலை பணிகள 1920 மீட்டர் நீளத்திற்கு ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில், 10 எண்ணிக்கையிலான தார்சாலைப் பணிகள் கீழ்கண்டவாறு

<table>
<tr><th>வ.எண்.</th><th>பணிகளின் விபரம்</th><th>நீளம்</th><th>அகலம்</th><th>மதிப்பீடு இலட்சத்தில்</th></tr>
<tr><td>1</td><td>குட்வில் நகர் தார்சாலை அமைக்கும் பணி</td><td>195.00</td><td>4.00</td><td>10.00</td></tr>
<tr><td>2</td><td>புளியங்குடி தார்சாலை அமைக்கும் பணி</td><td>190.00</td><td>4.00</td><td>10.00</td></tr>
<tr><td>3</td><td>சிஸ்திநகர் தார்சாலை அமைக்கும் பணி</td><td>195.00</td><td>4.00</td><td>10.00</td></tr>
<tr><td>4</td><td>வள்ளுவர் காலனி முதல் தெரு தார்சாலை அமைக்கும் பணி</td><td>195.00</td><td>4.00</td><td>10.00</td></tr>
<tr><td>5</td><td>வள்ளுவர் காலனி இரண்டாம் தெரு தார்சாலை அமைக்கும் பணி</td><td>195.00</td><td>4.00</td><td>10.00</td></tr>
<tr><td>6</td><td>தேர்வடக்கு தெரு தார்சாலை அமைக்கும் பணி</td><td>190.00</td><td>4.00</td><td>10.00</td></tr>
<tr><td>7</td><td>சின்னப்பள்ளி தெரு மற்றும் அண்ணாகாலனி தார்சாலை அமைக்கும் பணி</td><td>190.00</td><td>4.00</td><td>10.00</td></tr>
<tr><td>8</td><td>தென்றல் நகர் தார்சாலை அமைக்கும் பணி</td><td>190.00</td><td>4.00</td><td>10.00</td></tr>
<tr><td>9</td><td>பாரதி நகர் தார்சாலை அமைக்கும் பணி</td><td>190.00</td><td>4.00</td><td>10.00</td></tr>
<tr><td>10</td><td>உமர் ஒலி நகர் தார்சாலை அமைக்கும் பணி</td><td>190.00</td><td>4.00</td><td>10.00</td></tr>
<tr><td></td><td>கூடுதல்</td><td>1920</td><td>40,00</td><td>100.00</td></tr>
</table>

</td><td>தீர்மானம் எண்:- 639<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்படி பணிக்கான மதிப்பீடுகள் மற்றும் பிரேரணைகள் நகராட்சி நிர்வாக ஆணையருககு அனுப்பி வைக்கப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1067/2015/இ1) | |

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி

<u>சாதாரண கூட்டம்</u>

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 31.01.2020 | **பொருள் எண் 1**<br>நகராட்சி ஆணையர் (மு.கூ.பொ) மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களது டிசம்பர் 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:- 640**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 31.01.2020 | **பொருள் எண் 2**<br>சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண் 7/2014) 37வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 மற்றும தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015-ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் கூத்தாநல்லூர் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2020 கீழ்கண்டவாறு ஏற்படுத்தவும், பொதுமக்கள் அறிய ஏதுவாக தினசரி நாளிதழ்கள் மற்றும் மாவட்ட அரசிதழில் வெளியிடவும் நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**கூத்தாநல்லூர் நகராட்சி**<br>**சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள் ,2020-02-18**<br>சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண் 7/2014) 37வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 மற்றும தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015-ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் கூத்தாநல்லூர் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2020 கீழ்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 அத்தியாயம் 14 பிரிவு 306 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும், அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டும், மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுங்குபடுத்தவும், | **தீர்மானம் எண்:- 641**<br>**அனுமதிக்கப்பட்டது** |

கூத்தாநல்லூர் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மறறும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2020 ஏற்படுத்தப்படுகின்றது.

## அத்தியாயம் -1

## முதனிலை

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்**:- இந்த துணை விதிகள் கூத்தாநல்லூர் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள் ,2020 என்றழைக்கப்படும்.
2. இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

**பொருள் வரையறைகள்**:- இந்த துணை விதிகளில் உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை

(i) " சட்டம்" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண் 7/2014) என்று பொருள்படும்.

(ii) "விற்பனை திட்டம்" என்பது சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைப்படம் என்று பொருள்படும்.

(iii) "விதிகள்" என்பது தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 என்று பொருள்படும்.

(iv) "திட்டம்" என்பது சட்டத்தின் 38வது பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015 என்று பொருள்படும்.

(v) "நகர விற்பனை குழு" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனை குழு என்று பொருள்படும்.

சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும், வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.

## அத்தியாயம் -2

## விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுங்கு முறைகள்

(1) பாதசாரிகளின் நடமாட்டம் (foot ball) மற்றும் சாலையின் அகலம், வாகனம், மற்றும் பாத சாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டு விற்பனை மண்டலங்களை நகர விற்பனை குழு முடிவு செய்யும்.

(2) ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின் எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து கூத்தாநல்லூர் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிபார்க்கப்பட வேண்டும்.

(3) சாலையின் அகலத்தைக் கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்காணும் விவரங்களைக் கொண்டும் இத்திட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்ட விற்பனை மண்டலங்களை விவரிக்கப்பட வேண்டும்.

(i) இருவழி போக்குவரத்து கொண்ட 6 மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனங்கள் அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால் அச்சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(ii) 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும் அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iii) 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை அகலமான சாலைகளில் சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்

(iv) 10 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில் சாலையின் இருபுறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(v) ஒரு சாலையில் விற்பனை அனுமதிக்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(vi) சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால் அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பபட வேண்டும்

(vii) வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில்கொண்டுதான் சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.

(viii) சாலை வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துனை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**(4) சாலையோர விற்பனை தடைச்செய்யப்பட்ட மண்டலங்களின்,**

(i) அரசு கட்டிடங்கள், நீதிமன்றங்கள் நகராட்சி அலுவலகங்கள், தீயணைப்பு நிலையங்கள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கும்

(ii) பேருந்து நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு

(iii) பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் தளங்கள் மற்றும் அகழ்வுக்ள சட்டம், 2010ன் கீழ் அறிவிக்கப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.

(iv) மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்

(v) இரண்டு அல்லது அதிகமான சாலைகள் குறிப்பிட்ட இடங்களில் அனைத்து பக்கங்களில் 30 மீட்டர் நீளத்திற்கு

(vi) எந்த ஒரு கல்வி நிறுவனத்தின நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு

(vii) பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்

(viii) நகர விற்பனைக் குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து அத்தகைய இடங்களில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

குறிப்பு :- கணக்கெடுப்பின்போது அறியப்பட்ட எந்த ஒரு அங்காடியையோ அல்லது இயற்கையாக அமைய பெற்ற அங்காடியையோ விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

4 சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு:- எந்த ஒரு விற்பனை மண்டலத்திலும், விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்,

(i) வாகன போக்குவரத்து மிதிவண்டி மற்றும் பாதசாரி நடமாற்றத்திற்கு தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது

(ii) கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு முட்டுகொடுத்து தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது.

(iii) குடிநீர் வழங்கல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கும் தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது.

(iv) சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ வழிகாட்டு பலகைகள் அறிவிப்பு பலகைகள் நகர வேலைகள் அல்லது நடவடிக்கைகளுக்கோ தடங்கல் அல்லது இடையூறு செய்யக் கூடாது.

(v) ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது.

(vi) நகர விற்பனைக் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது.

(vii) நகர விற்பனை குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணிகம் செய்வதோ கூடாது.

(viii) உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர இதர இடங்களில் திடக்கழிவுகளை கொட்டக்கூடாது.

(ix) விற்பனை சான்றிதழ் காலாவதியாகிய பின்னர் பொருட்களையோ அல்லது சேவைகளையோ அல்லது விற்பனையோ செய்யக்கூடாது.

(x) ஒலி பெருக்கிகள், மெகா போன்கள், ஒலி அமைப்புகள் அல்லது பிற ஒலி பொருக்க

உபகரணங்கள் மற்றும் பிரதிபலிப்பு விளம்பரங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தக்கூடாது.

5 சாலையோர வியாபாரிகளின் பொறுப்பு :- சாலையோர வியாபாரிகள் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரின் கடமைகள்

(i) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்
(ii) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மட்டும் விற்பனை செய்யப்பட வேண்டும்.
(iii) விற்பனை செய்யும் இடத்தில் விற்பனை சான்றிதழ் காட்சிக்கு எப்பொழுதும் வைக்கப்பட வேண்டும்.
(iv) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர விற்பனையார் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் அல்லது அவரின் பணியாளர் விற்பனை இடத்தில் விற்பனை செய்யும்போது இருக்க வேண்டும்.
(v) எபபொழுதும் விற்பனை இடத்தினை பாதுகாப்பாகவும் நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்
(vi) உள்ளாட்சி அமைப்பின் தேவைக்கேற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்.
(vii) உணவு மாசுபடுதல் தடுப்பு சட்டம் 1954 அல்லது இதர விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்.
(viii) நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 ஐ கடைபிடிக்க வேண்டும்.
(ix) நெகிழி கழிவு மேலாண்மை விதிகள் 2016 ஐ கடைபிடிக்க வேண்டும்
(x) தகுதியுடைய அலுவலர் கோரும்போது விற்பனை சான்றிதழ் காண்பிக்க வேண்டும்.
(xi) இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

## அத்தியாயம் -3
## கட்டணங்கள், வரிகள் மற்றும் அபராதங்கள்

**6. விற்பனை கட்டணம் - (1)** சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும்

2 உப விதி (1)ன்படியான விற்பனை கட்டணம் கீழ்காணும் பட்டியலின்படியாகும்.

| வ. எண். | சாலையோர விற்பனையாளரின் வகை | பரப்பளவு | விற்பனை கட்டணம் |
|---|---|---|---|
| 1 | நிலையான விற்பனையாளர் ((முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் - வருடத்திற்கு ரூ.750/-க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 2 சதவீதம் - வருடத்திற்கு ரூ 1500/-க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வழிகாட்டி மதிப்பில் 3 சதவீதம் - வருடத்திற்கு ரூ.3000/-க்கு குறையாமல் |
| 2 | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 0.5 சதவீதம் - வருடத்திற்கு ரூ.375/-க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் - வருடத்திற்கு ரூ 750//-க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வழிகாட்டி மதிப்பில் 1.5 சதவீதம் - வருடத்திற்கு ரூ.1500/-க்கு குறையாமல் |
| 3 | நடமாடும் விற்பனையாளர் (மோட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.750/- |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1500/- |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வருடத்திற்கு ரூ.3000/- |
| 3 | நடமாடும் விற்பனையாளர் (மோட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.375/- |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.750/- |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வருடத்திற்கு ரூ.1500/. |
| 5 | நடமாடும் விற்பனையாளர் (தலைசுமை) | - | வருடத்திற்கு ரூ. 250/- |

3) மூன்று வருடங்களுக்கு ஒருமுறை விற்பனை கட்டணம் மாற்றியமைக்கப்பட்டு உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்படும்.

7. **பராமரிப்பு கட்டணம்** :- (1) சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அங்காடியின் தகுதியின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்பால் செய்யப்பட்டுள்ள குடிமை நலன்கள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சாலையோர விற்பனையாளர்கள் மற்றும் அங்காடி வகைகள் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்படும்.

(2) உப விதி (1) யில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணம் மாதத்திற்கு 100/-க்கு குறையாமலும், ரூ.300/-க்கு மிகாமலும் இருக்க வேண்டும்

(3) பராமரிப்பு கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும்.

**8. அபராதம் விதித்தல்** :- எந்தவொரு சாலையோர விற்பனையாளரும்,

(i) விற்பனை சான்றிதழ்படி, மாற்று இடத்திற்கு செல்ல அல்ல காலி செய்ய தவறும் பட்சத்தில், அல்லது

(ii) விற்பனை சான்றிதழ் இல்லாமல் விற்பனை செயலில் ஈடுபட்டாலோ விற்பனை சான்று மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறை சட்ட பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் திட்டத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்போது,

மாதாந்திர கட்டணத்தில் (மூன்று) மடங்காக அபராதம் செலுத்தப்பட வேண்டும்

(2) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சாலையோர விற்பனையார் மூன்று முறைகள் மீறினால் அவரின் விற்பனை சான்று இடைநீக்கம் செய்யப்படும். நான்காவது முறையாக விதிமுறைகளை மீறினால் அவரின் விற்பனை சான்று ரத்து செய்யப்படும்.

## அத்தியாயம் -4

## பலவகை

9. **விற்பனை மண்டலத்தில் போக்குவரத்தினை ஒழுங்குமுறை படுத்துதல்**:- (1) நகர விற்பனை குழுவால் அறிவிக்கப்பட்ட விற்பனை மண்டலங்களில், ஒரு வழி வாகன போக்குவரத்து, வேக கட்டுப்பாடு வாகன நிறுத்தம், கனரக வாகனங்கள் இயக்கம் மற்றம் இது குறித்த இதர பொருள்க்ள குறித்து போக்குவரத்து காவல்துறையால் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் விற்பனை மண்டலம் அமைப்பது குறித்து போக்குவரத்து காவல்துறையால் அங்கீகரிக்கப்படவில்லையெனில் அந்த விற்பனை மண்டலத்தினை மாற்றியமைப்பது குறித்தோ அல்லது விற்பனை மண்டலத்தினை ரத்து செய்வது குறித்தோ நகர விற்பனைக்குழு பரிசீலனை செய்ய வேண்டும்.

(2) விற்பனை மண்டலத்தில், விற்பனை பகுதி நடைபாதை மற்றும் வண்டி பாதை ஆகியவற்றினை உள்ளாட்சி அமைப்பால் தெளிவாக தெளிவுபடுத்த வேண்டும்.

10. **விற்பனை மண்டலத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தினை ஒழுங்குபடுத்துதல்**:- எந்த ஒரு விற்பனையாளரும், தயார் செய்யப்பட்ட அல்லது அந்த இடத்தில் தயாரித்து விற்பனை செய்யும் உணவு பொருட்கள் குறித்து உணவு மாசுபடுதல் தடுப்பு சட்டம், 1954ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தவறும் பட்சத்தில், மேற்படி சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலரால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள்

| | | |
|---|---|---|
| | எடுக்கப்பட வேண்டும் மற்றும தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட வேண்டும். நகர விற்பனை குழுவால் அந்த சாலையோர வியாபாரியின் விற்பனை சான்றினை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.<br><br>11. **விற்பனை மண்டலங்களில் குடிமை சேவைகளை ஒழுங்குபடுத்துதல் :-** விற்பனை மண்டலங்களில், பொது கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்த வேண்டும்.<br>(2) உள்ளாட்சி அமைப்பால் திடக்கழிவுகளை சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்.<br>(3) சாலையோர வியாபாரிகள் தனிநபர் தேவைக்கு மின் செரிவூட்டும் சாதனம் (Rechargeable Lamps) அல்லது சுயமான மின் உற்பத்தி செய்யும் சாதனங்கள் உபயோகபடுத்துதல் வேண்டும்<br>(4) விற்பனை மண்டலங்களில் தனி நபர் மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கக்கூடாது.<br>(5) மின்சார கம்பங்களிலிருந்து முறையற்ற மின் உபயோகத்தை தடுக்கப்படும்<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண். 1889/2014/எப1) | |
| 31.01.2020 | **பொருள் எண் 3**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 50 U – 0518 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு புதிய EXIDE BATTERY (HEAVY DUTY) 12 V 100 AH BATTERY FULL ACID CHARGES (18+18) புதிதாக வாங்குவதற்கு ஓட்டுனர் திரு.ஏ.ஆரோக்கியதாஸ் 23.01.2020 அன்று கடிதத்தின் வாயிலாக தெரிவித்துள்ளார். எனவே மேற்படி வாகனத்திற்கு புதியதாக பேட்டரி வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.10,100/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 329//2020/இ1) | **தீர்மானம் எண்:-642**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 31.01.2020 | **பொருள் எண் 4**<br>இந்நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு 2018-19ம் ஆண்டுக்குரிய சீருடைகள் வழங்குவதற்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 419 நாள் 31.12.2018ல் அனுமதி வழங்கப்பட்டு 26.03.2019 அன்று பணியாளர்களுக்கு முதற்கட்டமாக சீருடைகள் வழங்கப்பட்டது. , தற்போது 2019ம் ஆண்டு தீபாவளி மற்றும் 2020ம் ஆண்டு பொங்கல் விழாக்களுக்கு வழங்கப்பட வேண்டிய சீருடைகள் நிலுவையில் உள்ளது. தற்போது பணியாளர்கள் மழைக்காலங்கள் மற்றும் வேறு நகராட்சி, மாநகராட்சிகளில் நடைபெறும் சிறப்பு பணிகளுக்கு சென்று பணிபுரிய வேண்டிய நிலையில் உள்ளார்கள். எனவே புதிய சீருடைகள் வழங்குமாறும் மேற்படி பணியாளர்கள் கோரிக்கை வைத்த வண்ணம் உள்ளனர். எனவே 2019-2020 ஆம் ஆண்டுக்குரிய சீருடைகள் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண். 25480/ஜெ2/2015 நாள் 13.06.2016ன்படி தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் | **தீர்மானம் எண்:- 643**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | கார்ப்பரேஷன் கோயம்புத்தூர் என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கிக்கொள்ளவும் அதற்கான தையல்கூலி மற்றும் இதர செலவினங்களுக்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.60,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 2514/2017/எச்1) | |
| 31.01.2020 | **பொருள் எண் 5**<br>இந்நகராட்சியில் சுதந்திர தினவிழாவினை முன்னிட்டு அலங்கார விளக்குகள் மற்றும் மைக்செட் மற்றும் வாகன வாடகை பணிக்கு கோரப்பட்ட விலைப்புள்ளியில் கீழ்கண்ட விலைப்புள்ளிதாரர்களிடமிருந்து மூன்று விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.<br><br>வ. எண் / விலைப்புள்ளிதாரர் பெயர் / விலைப்புள்ளி தொகை<br>1 / திரு.வீ.எழில்மாறன் விலைபுள்ளிதாரர் லெட்சுமாங்குடி / 4900<br>2 / திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை லெட்சுமாங்குடி / 5100<br>3 / திரு.பி.செந்தில்நாதன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி / 5250<br><br>மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு. வி.எழில்மாறன் விலைப்புள்ளிதாரர் லெட்சுமாங்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>குறைவான விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். /2019/இ1) | **தீர்மானம் எண்:-644 அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு.வீ.எழில்மாறன் விலைபுள்ளிதாரர் லெட்சுமாங்குடி | 4900 |
| 2 | திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை லெட்சுமாங்குடி | 5100 |
| 3 | திரு.பி.செந்தில்நாதன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி | 5250 |

| | | |
|---|---|---|
| 31.01.2020 | **பொருள் எண் 6**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பாரதி நகர், சிஸ்தி நகர், சித்தாத்தங்கரை, இந்திரா நகர், கலைஞர் காலனி , மரக்கடை மெயின் ரோடு மற்றும் இதர பகுதிகளில் புதிய குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்கு 28.01.2020 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது. | **தீர்மானம் எண்:-645**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின் ரோடு | 198668 | 198168 | 0.25 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.வி எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு | 198668 | 199800 | 0.57 % மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின் ரோடு என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.25% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 1111/2019/இ1)

| | | |
|---|---|---|
| 31.01.2020 | **பொருள் எண் 7**<br>இந்நகராட்சிக்குட்பட்ட மரக்கடை மெயின் சாலை அருகில் உள்ள மண்சாலையினை கிராவல் சாலையாக மாற்றும் பணிக்கு 28.01.2020 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.<br><br>(அட்டவணை கீழே)<br><br>மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின் ரோடு என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.06% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 1106/2019/இ1) | **தீர்மானம் எண்:- 646**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின் ரோடு | 123269 | 123200 | 0.06 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.வி எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு | 123269 | 123360 | 0.07 % மதிப்பீட்டைவிட அதிகம் |

31.01.2020

**பொருள் எண் 8**

இந்நகராட்சிக்குட்பட்ட குடிநீர் பகிர்மான குழாய்களில் அமைக்கப்பட்ட வால்வுகள் மற்றும் சிலாப்புகள் சரி செய்யும் பணிக்கு 28.01.2020 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திருஜி. ரவிச்சந்திரன் ஒப்பந்ததாரர் வடபாதி | 77314 | 77177 | 0.18 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.பி. செந்தில்நாதன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி | 77314 | 77439 | 0.16 % மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.ஜி.ரவிச்சந்திரன் ஒப்பந்ததாரர் வடபாதி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.18% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 1107/2019/இ1)

**தீர்மானம் எண்:-647**
**அனுமதிக்கப்பட்டது**

31.01.2020

**பொருள் எண் 9**

இந்நகராட்சிக்குட்பட்ட புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்திற்கு புதிதாக மின்மாற்றி மற்றும் மும்முனை மின்சாரம் அமைக்க மேடைதளம் அமைக்கும் பணிக்கு 28.01.2020 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திருஜி. ரவிச்சந்திரன் ஒப்பந்ததாரர் வடபாதி | 26731 | 26728 | 0.01 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.பி. செந்தில்நாதன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி | 26731 | 26741 | 0.04 % மதிப்பீட்டைவிட அதிகம் |

**தீர்மானம் எண்:-648**
**அனுமதிக்கப்பட்டது**

<table>
<tr>
<td></td>
<td>மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.ஜி.ரவிச்சந்திரன் ஒப்பந்ததாரர் வடபாதி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.01% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 1107/2019/இ1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.01.2020</td>
<td>பொருள் எண் 10<br>இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள ஆயில் எஞ்சின், புளியங்குடி 1.5 HP submersible Motor சீர் செய்யும் பணிக்கு 28.01.2020 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த தொகை</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.வி எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு</td><td>54840</td><td>54660</td><td>0.33 % மதிப்பீட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.பி. செந்தில்நாதன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி</td><td>54840</td><td>55360</td><td>0.95 % மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>
மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.வீ.எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.33% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 1107/2019/இ1)</td>
<td>தீர்மானம் எண்:-649<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td>31.01.2020</td><td>

**பொருள் எண் 11**

இந்நகராட்சிக்குட்பட்ட அலுவலக பம்ப் அறையில் உள்ள 12.5 HP Motor, 7.5 Submersible Motor, Standby 12.5 HP Motor, 200 MM Valve சீர் செய்யும் பணி. கீழ் பணங்காட்டாங்குடி மோட்டார்,கோரையாறு மோட்டார் மற்றும் மரக்கடை சிவன் கோவில் அருகில் உள்ள 20 HP Submersible Motor பழுது நீக்கும் பணிக்கு 28.01.2020 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த தொகை</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திருஜி. ரவிச்சந்திரன் ஒப்பந்ததாரர் வடபாதி</td><td>169710</td><td>169610</td><td>0.06 % மதிப்பீட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.பி. செந்தில்நாதன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி</td><td>169710</td><td>173747</td><td>2.38 % மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.ஜி.ரவிச்சந்திரன் ஒப்பந்ததாரர் வடபாதி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.06% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 1107/2019/இ1)

</td><td>

**தீர்மானம் எண்:-650**

**அனுமதிக்கப்பட்டது**

</td></tr>
<tr><td>31.01.2020</td><td>

**பொருள் எண் 12**

14வது மத்திய நிதி ஆணையம் 2019-20ம் திட்டத்தின் கீழ் சாலைகள் மறு சீரமைப்பு பணிகள் மேற்க்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி பகுதியில் உள்ள குட்வில் நகர் பகுதியில் Paver Machine கொண்டு தார்சாலை அமைக்கும் பணிக்கு 28.01.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்று மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

</td><td>

**தீர்மானம் எண்:-651**

**அனுமதிக்கப்பட்டது**

</td></tr>
</table>

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின் ரோடு | 884569 | 927910 | 4.90% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2 | திரு.வி எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு | 884569 | 928824 | 5.00% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின்ரோடு என்பவரது 4.90% மதிப்பீட்டைவிட கூடுதலான ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண். 1067/2019/இ1)

31.01.2020

**பொருள் எண் 13**

14வது மத்திய நிதி ஆணையம் 2019-20ம் திட்டத்தின் கீழ் சாலைகள் மறு சீரமைப்பு பணிகள் மேற்க்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி பகுதியில் உள்ள புளியங்குடி தெரு பகுதியில் Paver Machine கொண்டு தார்சாலை அமைக்கும் பணிக்கு 28.01.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்று மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின் ரோடு | 861888 | 904117 | 4.90% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2 | திரு.வி எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு | 861888 | 905008 | 5.00% மதிப்பீட்டைவிட அதிகம் |

**தீர்மானம் எண்:-652**
**அனுமதிக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு<br>மேற்படி பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின்ரோடு என்பவரது 4.90% மதிப்பீட்டைவிட கூடுதலான ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண். 1067/2019/இ1) | |
| 31.01.2020 | **பொருள் எண் 14**<br>14வது மத்திய நிதி ஆணையம் 2019-20ம் திட்டத்தின் கீழ் சாலைகள் மறு சீரமைப்பு பணிகள் மேற்க்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி பகுதியில் உள்ள சிஸ்தி நகர் பகுதியில் Paver Machine கொண்டு தார்சாலை அமைக்கும் பணிக்கு 28.01.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்று மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது<br><br>வ. எண் / ஒப்பந்ததாரர் பெயர் / ஒப்பந்த தொகை / ஒப்பந்தபுள்ளி தொகை / சதவிகிதம்<br>1 / திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின் ரோடு / 884569 / 927910 / 4.90% மதிப்பீட்டைவிட அதிகம்<br>2 / திரு.வி எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு / 884569 / 928824 / 5.00% மதிப்பீட்டைவிட அதிகம்<br><br>அலுவலக குறிப்பு<br>மேற்படி பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின்ரோடு என்பவரது 4.90% மதிப்பீட்டைவிட கூடுதலான ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண். 1067/2019/இ1) | **தீர்மானம் எண்:- 653**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 31.01.2020 | **பொருள் எண் 15**<br>14வது மத்திய நிதி ஆணையம் 2019-20ம் திட்டத்தின் கீழ் சாலைகள் மறு சீரமைப்பு பணிகள் மேற்க்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி பகுதியில் உள்ள வள்ளுவர் காலனி முதல் தெரு பகுதியில் Paver Machine கொண்டு தார்சாலை அமைக்கும் பணிக்கு 28.01.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்று மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது | **தீர்மானம் எண்:-654**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | <table><tr><td>வ. எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த தொகை</td><td>ஒப்பந்தபுள்ளி தொகை</td><td>சதவிகிதம்</td></tr><tr><td>1</td><td>திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின் ரோடு</td><td>884569</td><td>927910</td><td>4.90% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr><tr><td>2</td><td>திரு.வி எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு</td><td>884569</td><td>928824</td><td>5.00% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr></table><br>அலுவலக குறிப்பு<br>மேற்படி பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின்ரோடு என்பவரது 4.90% மதிப்பீட்டைவிட கூடுதலான ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண். 1067/2019/இ1) | |
| 31.01.2020 | **பொருள் எண் 16**<br>14வது மத்திய நிதி ஆணையம் 2019-20ம் திட்டத்தின் கீழ் சாலைகள் மறு சீரமைப்பு பணிகள் மேற்க்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி பகுதியில் உள்ள வள்ளுவர் காலனி இரண்டாவது தெரு பகுதியில் Paver Machine கொண்டு தார்சாலை அமைக்கும் பணிக்கு 28.01.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்று மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது<br><table><tr><td>வ. எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த தொகை</td><td>ஒப்பந்தபுள்ளி தொகை</td><td>சதவிகிதம்</td></tr><tr><td>1</td><td>திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின் ரோடு</td><td>884569</td><td>927910</td><td>4.90% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr><tr><td>2</td><td>திரு.வி எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு</td><td>884569</td><td>928824</td><td>5.00% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr></table> | **தீர்மானம் எண்:-655**<br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td>அலுவலக குறிப்பு<br>மேற்படி பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின்ரோடு என்பவரது 4.90% மதிப்பீட்டைவிட கூடுதலான ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண். 1067/2019/இ1)</td><td></td></tr>
<tr><td>31.01.2020</td><td>பொருள் எண் 17<br>14வது மத்திய நிதி ஆணையம் 2019-20ம் திட்டத்தின் கீழ் சாலைகள் மறு சீரமைப்பு பணிகள் மேற்க்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி பகுதியில் உள்ள தேர் வடக்கு தெரு பகுதியில் Paver Machine கொண்டு தார்சாலை அமைக்கும் பணிக்கு 28.01.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்று மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த தொகை</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின் ரோடு</td><td>861888</td><td>904117</td><td>4.90% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.வி எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு</td><td>861888</td><td>905008</td><td>5.00% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு<br>மேற்படி பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின்ரோடு என்பவரது 4.90% மதிப்பீட்டைவிட கூடுதலான ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண். 1067/2019/இ1)</td><td>தீர்மானம் எண்:-656 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.01.2020</td><td>பொருள் எண் 18<br>14வது மத்திய நிதி ஆணையம் 2019-20ம் திட்டத்தின் கீழ் சாலைகள் மறு சீரமைப்பு பணிகள் மேற்க்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி பகுதியில் உள்ள சின்னப்பள்ளி தெரு மற்றும் அண்ணா காலனி தெரு பகுதியில் Paver Machine கொண்டு தார்சாலை அமைக்கும் பணிக்கு 28.01.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்று மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது</td><td>தீர்மானம் எண்:-657 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின் ரோடு | 861888 | 904117 | 4.90% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2 | திரு.வி எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு | 861888 | 905008 | 5.00% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின்ரோடு என்பவரது 4.90% மதிப்பீட்டைவிட கூடுதலான ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண். 1067/2019/இ1)

31.01.2020

**பொருள் எண்** 19

**தீர்மானம் எண்:-658**
**அனுமதிக்கப்பட்டது**

14வது மத்திய நிதி ஆணையம் 2019-20ம் திட்டத்தின் கீழ் சாலைகள் மறு சீரமைப்பு பணிகள் மேற்க்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி பகுதியில் உள்ள தென்றல் நகர் பகுதியில் Paver Machine கொண்டு தார்சாலை அமைக்கும் பணிக்கு 28.01.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்று மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின் ரோடு | 861888 | 904117 | 4.90% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2 | திரு.வி எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு | 861888 | 905008 | 5.00% மதிப்பீட்டைவிட அதிகம் |

<table>
<tr><td></td><td>அலுவலக குறிப்பு<br>மேற்படி பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின்ரோடு என்பவரது 4.90% மதிப்பீட்டைவிட கூடுதலான ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம்<br>(ந.க.எண். 1067/2019/இ1)</td><td></td></tr>
<tr><td>31.01.2020</td><td>பொருள் எண் 20<br>14வது மத்திய நிதி ஆணையம் 2019-20ம் திட்டத்தின் கீழ் சாலைகள் மறு சீரமைப்பு பணிகள் மேற்க்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி பகுதியில் உள்ள பாரதி நகர் பகுதியில் Paver Machine கொண்டு தார்சாலை அமைக்கும் பணிக்கு 28.01.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்று மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது<br><br>
<table>
<tr><td>வ. எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த தொகை</td><td>ஒப்பந்தபுள்ளி தொகை</td><td>சதவிகிதம்</td></tr>
<tr><td>1</td><td>திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின் ரோடு</td><td>861888</td><td>904117</td><td>4.90% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.வி எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு</td><td>861888</td><td>905008</td><td>5.00% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு<br>மேற்படி பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின்ரோடு என்பவரது 4.90% மதிப்பீட்டைவிட கூடுதலான ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம்<br>(ந.க.எண். 1067/2019/இ1)</td><td>தீர்மானம் எண்:-659<br><u>அனுமதிக்கப்பட்டது</u></td></tr>
<tr><td>31.01.2020</td><td>பொருள் எண் 21<br>14வது மத்திய நிதி ஆணையம் 2019-20ம் திட்டத்தின் கீழ் சாலைகள் மறு சீரமைப்பு பணிகள் மேற்க்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி பகுதியில் உள்ள உமர் ஒலி நகர் பகுதியில் Paver Machine கொண்டு தார்சாலை அமைக்கும் பணிக்கு 28.01.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்று மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது</td><td>தீர்மானம் எண்: 660<br><u>அனுமதிக்கப்பட்டது</u></td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>வ. எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த தொகை</td><td>ஒப்பந்தபுள்ளி தொகை</td><td>சதவிகிதம்</td></tr>
<tr><td>1</td><td>திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின் ரோடு</td><td>861888</td><td>904117</td><td>4.90% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.வி எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு</td><td>861888</td><td>905008</td><td>5.00% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>
<br>
அலுவலக குறிப்பு<br>
மேற்படி பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின்ரோடு என்பவரது 4.90% மதிப்பீட்டைவிட கூடுதலான ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம்<br>
(ந.க.எண். 1067/2019/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.01.2020</td>
<td>
பொருள் எண் 22<br>
இந்நகராட்சிக்குட்பட்ட 4வது வார்டு காமராஜர் காலனியில் உள்ள அடிபம்பு பழுதடைந்துள்ளது. அதனை புதிதாக இந்தியா மார்க் II அடிபம்பாக அமைத்து காங்கிரிட் தளம் அமைப்பதற்கும் ஆகும் மதிப்பீடு ரூ.27,500/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<br>
அலுவலக குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்<br>
(ந.க.எண்.211/2020/இ1)
</td>
<td>தீர்மானம் எண்:-661<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.01.2020</td>
<td>
பொருள் எண் 23<br>
இந்நகராட்சிக்குட்பட்ட 1வது வார்டு அய்யன் தோட்டச்சேரியில் உள்ள இந்தியா மார்க் II அடிபம்பு மேல் பாகம் முழுவதும் பழுதடைந்து பொதுமக்கள் உபயோகபடுத்த முடியாத நிலையில் உள்ளது. அதனை புதிதாக மாற்றி காங்கிரிட் தளம் அமைத்திட ஆகும் மதிப்பீடு ரூ.27,500/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<br>
அலுவலக குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்<br>
(ந.க.எண்.         /2020/இ1)
</td>
<td>தீர்மானம் எண்:-662<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 31.01.2020 | **பொருள் எண் 24**<br>இந்நகராட்சிக்கு உட்பட்ட 12வது வார்டு சித்தாத்தங்கரையில் உள்ள இந்தியா மார்க் II அடிபம்பு பழுதடைந்துள்ளது. அதனை அகற்றிவிட்டு புதிதாக இந்தியா மார்க் II அமைத்திடவும், தளம் அமைத்திடவும் ஆகும் மதிப்பீடு ரூ.29,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். /2020/இ1) | **தீர்மானம் எண்:- 663**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 31.01.2020 | **பொருள் எண் 25**<br>இந்நகராட்சிக்குட்பட்ட 8வது வார்டு பஜனை மடத்தெருவில் உள்ள இந்தியா மார்க் II அடிபம்பு முழுவதும் பழுதடைந்துள்ளது. அதனை புதிதாக மாற்றிடவும், தளம் அமைத்திடவும் ஆகும் மதிப்பீடு ரூ.29,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். /2020/இ1) | **தீர்மானம் எண்:- 664**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 31.01.2020 | **பொருள் எண் 26**<br>இந்நகராட்சிக்கு உட்பட்ட 1வது வார்டு கோரையாறு வடக்கு தெருவில் உள்ள இந்தியா மார்க் II அடிபம்பு மேல்பாகம் பழுதடைந்துள்ளது. அதனை புதிதாக மாற்றி தளம் அமைத்திட ஆகும் மதிப்பீடு ரூ.29,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். /2020/இ1) | **தீர்மானம் எண்:- 665**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 31.01.2020 | **பொருள் எண் 27**<br>இந்நகராட்சிக்கு உட்பட்ட நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அறை, பொறியாளர் அறை, கணினி வசூல் மையம் மற்றும் பொதுப்பிரிவு, நகரமைப்பு நகர் மன்ற கூடம், நகர் மன்ற தலைவர் மற்றும் சுகாதார அறையில் ஸ்டிக்கர் அமைக்கவும் ஜன்னல் Screen கதவு அவற்றினை கண்ணாடி மற்றும் Lous பொருத்திட ஆகும் உத்தேச தொகை ரூ.45,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்:-666**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| 31.01.2020 | **பொருள் எண் 28**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான அபாயகரமான கழிவுகளை அழிக்கும் புதிய இயந்திர எரிதொட்டி (Incinerator) வாங்கும் பணிக்கு 24.01.2020 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது. | **தீர்மானம் எண்:- 667**<br>**அனுமதிக்கப்பட்டது** |
|---|---|---|

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ஞானம் என்விரான்மெண்ட் சர்வீஸஸ் தஞ்சாவூர் | 1,40,000 | 1,35,000 | 3.57 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | கிரீன் அக்ரோ என்விரான்மெண்ட் சர்வீஸஸ் காஞ்சிபுரம் | | 1,40,500 | 0.35 % மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள ஞானம் என்விரான்மெண்ட் சர்வீஸஸ் தஞ்சாவூர் என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 3.57% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 1032/2019/எச்1)

| | | |
|---|---|---|
| 31.01.2020 | **பொருள் எண் 29**<br>இந்நகராட்சிக்குட்பட்ட கமாலியா தெரு, சின்னப்பள்ளி தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு கோரப்பட்ட விலைப்புள்ளியில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | **தீர்மானம் எண்:- 668**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு.எம்.உதயகுமார் மரக்கடை மெயின் ரோடு லெட்சுமாங்குடி | 14,900 |
| 2 | திரு.வீ.எழில்மாறன் கொரடாச்சேரி ரோடு லெட்சுமாங்குடி | 15,000 |
| 3 | திரு.பி.செந்தில்நாதன் மரக்கடை தெற்கு தெரு லெட்சுமாங்குடி | 15,500 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.எம்.உதயகுமார் விலைப்புள்ளிதாரர் மரக்கடை மெயின் ரோடு என்பவரிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 1109/2019/இ1)

<table>
<tr>
<td>31.01.2020</td>
<td>

**பொருள் எண் 30**

இந்நகராட்சியில் சொத்துவரி திருத்தம் /மறு அளவீடு செய்யப்பட்டதற்கான ஆட்சேபனை மனுக்கள் ஜெராக்ஸ் எடுக்கும் பணிக்கு கோரப்பட்ட விலைப்புள்ளியில் மூன்று விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

<table>
<tr><th>வ. எண்</th><th>விலைப்புள்ளிதாரர் பெயர்</th><th>விலைப்புள்ளி தொகை (நகல் ஒன்றுக்கு)</th></tr>
<tr><td>1</td><td>அனு ஜெராக்ஸ் 16டி, சாந்தப்பா காம்ப்ளக்ஸ் லெட்சுமாங்குடி</td><td>1.65</td></tr>
<tr><td>2</td><td>விஸ்வா ஜெராக்ஸ் & லேமினேஷன் தாலுக்கா ஆபிஸ் எதிர்புறம் கூத்தாநல்லூர்</td><td>1.70</td></tr>
<tr><td>3</td><td>கேலக்சி ஜெராக்ஸ் தாலுக்கா ஆபிஸ் எதிர்புறம் கூத்தாநல்லூர்</td><td>1.75</td></tr>
</table>

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள அனு ஜெராக்ஸ் லெட்சுமாங்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளி (நகல் ஒன்றுக்கு ரூ.1.65) குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 1105/2018/அ1)

</td>
<td>

**தீர்மானம் எண்:- 669**

**அனுமதிக்கப்பட்டது**

</td>
</tr>
<tr>
<td>31.01.2020</td>
<td>

**பொருள் எண் 31**

இந்நகராட்சிக்கு உட்பட்ட 24 வார்டுகளிலும் அடிக்கடி ஏற்படும் பழுதுகளை சரி செய்ய நகராட்சியில் போதுமான உபகரணங்கள் இல்லாததால் அதனை சீர் செய்ய சிரமம் ஏற்படுகிறது. குடிநீர் அவசர அவசியம் கருதி குடிநீர் உபகரணங்கள் வாங்கிட ரூ.1,20,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

</td>
<td>

**தீர்மானம் எண்:-670**

**அனுமதிக்கப்பட்டது**

</td>
</tr>
</table>

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி